சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

Case No. OS.110/2018

2022ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5ம் நாள் திங்கட்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.சித்ரா பென்ஞ் கிளார்க் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்யப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கருணாமூர்த்தி | தொழில் | |
| தந்தை/கணவர் பெயர் | பரசுராமன் | ஜாதி | |
| கிராமம் | கொசப்பாளையம் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | |

**05.09.2022 முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக 17.10.2006 தேதியிட்ட அசல் அடமானக் கடன் பத்திரம் வா.சா.ஆ. 1, 07.10.2017 தேதியிட்ட வா.சா.ஆ.1 அடமானப் பத்திரத்தில் உள்ள மேடோவர் குறிப்பு வா.சா.ஆ.2, 23.05.2017 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் நகல் வா.சா.ஆ.3, 05.06.2017 தேதியிட்ட திருப்பப்பட்ட அஞ்சலக ஒப்புகை வா.சா.ஆ.4, 23.10.2017 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் நகல் வா.சா.ஆ.5, 25.10.2017 தேதியிட்ட திருப்பப்பட்ட அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.6, தாக்கல் செய்கிறேன். தாவாவில் கோரியுள்ளவாறு தீர்ப்பளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.